RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்-75 | 21 மார்ச் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## டாஸ்மாக்கில் ரூ.1,000 கோடி முறைகேடு குற்றச்சாட்டு அமலாக்கத் துறை விசாரணைக்கு தடை கோரி தமிழக அரசு

சென்னை, மார்ச் 21

டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ.1,000 கோடி அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளதாக அமலாக்கத் துறை குற்றம்சாட்டியுள்ள நிலையில், அமலாக்கத் துறையின் விசாரணைக்கு தடை விதிக்கக்கோரியும், அதிகாரிகளை துன்புறுத்தக் கூடாது என கோரியும் டாஸ்மாக் நிறுவனம் தரப்பில் தமிழக அரசு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.



தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜி துறை அமைச்சராக பொறுப்பு வகிக்கும் டாஸ்மாக் நிறுவனத்தை மையப்படுத்தி அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த மார்ச் 6ம் தேதி முதல் மார்ச் 8ம் தேதி வரை தொடர் சோதனையில் ஈடுபட்டனர். குறிப்பாக டாஸ்மாக் தலைமை அலுவலகம், அம்பத்தூர் தொழிற்பேட்டை, மதுபான குடோன், அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீடு, திமுக எம்.பி. ஜெகத்ரட்சகனுக்கு சொந்தமான மதுபான ஆலை உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் பல்வேறு ஆவணங்களை அதிகாரிகள் கைப்பற்றினர். இந்த சோதனையின் முடிவில் டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ.1,000 கோடி வரை முறைகேடுகள் நடந்திருப்பதாக அமலாக்கத் துறை அறிக்கை வெளியிட்டது.

அதில், போக்குவரத்து தொடர்பான டெண்டர், மதுபான உரிமம், மதுபான ஆலைகள் அதிகாரிகளுக்கு வழங்கிய லஞ்சம், மதுபான டெண்டர், மதுபான கொள் முதல், ஊழியர்கள் பணிநியமனம் மற்றும் இடமாற்றம் போன்றவற்றில் வரிஏய்ப்பு, சட்டவிரோத பணப்பரிவர்த்தனை நடைபெற்றுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டது. குறிப்பாக பாட்டிலுக்கு ரூ.10 முதல் ரூ. 30 வரை கூடுதலாக பணம் வசூலித்தது தொடர்பான ஆதாரங்கள் சிக்கியுள்ளதாகவும், போக்குவரத்துக்காக ஆண்டுதோறும் ரூ.100 கோடியை செலவிட்டு, கணக்கில் காட்டப்படாத கோடிக் கணக்கான தொகை மூலமாக சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் டாஸ்மாக் நிறுவன அதிகாரிகள் ஈடுபட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அமலாக்கத் துறையின் இந்த நடவடிக்கைகளுக்கு தடை கோரி டாஸ்மாக் நிறுவனம் தரப்பில் தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. அதில், தமிழக அரசின் அனுமதியின்றி டாஸ்மாக் விவகாரம் தொடர்பாக சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்டத்தில் நடவடிக்கை எடுக்க தடை விதிக்க வேண்டும். விசாரணை என்ற பெயரில் டாஸ்மாக் நிறுவன அதிகாரிகளையோ அல்லது ஊழியர்களையோ துன்புறுத்தக் கூடாது என தடை விதிக்க வேண்டும். கடந்த மார்ச் 6 முதல் 8ம் தேதி வரை நடைபெற்ற அமலாக்கத் துறையின் சோதனையையும், ஆவணங்கள் பறிமுதல் செய்ததையும் சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும் என அதில் கோரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

## தங்கம் விலை மீண்டும் ஒரு புதிய உச்சத்தை எட்டியது

சென்னை, மார்ச் 21

தங்கம் விலை நேற்று (மார்ச் 20) மீண்டும் ஒரு புதிய உச்சத்தை எட்டியுள்ளது. அதன்படி 22 கேரட் ஆபரணத் தங்கம் ஒரு பவுன் ரூ.66,480க்கு விற்பனையாகிறது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப, இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. இந்த ஆண்டில் ஜனவரி 29ம் தேதி முதல் தங்கம் விலை உயரத் தொடங்கியது. ஜனவரி 31ம் தேதி ஒரு பவுன் ஆபரண தங்கம் ரூ.61,000ஐயும், பிப்ரவரி 1ம் தேதி ரூ.62,000ஐயும் தாண்டியது. பிப்ரவரி 11ம் தேதி ரூ.64,480 என்றும், 20ம் தேதி ரூ.64,560 என்றும் அதிகரித்தது.

இதன் பிறகு, ஒருசில நாட்கள் சற்று விலை குறைந்தாலும், பிப்ரவரி 25ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.64,600 ஆக உயர்ந்து, புதிய உச்சத்தை தொட்டது. இதன்பிறகு, ஏற்ற இறக்கமாக இருந்து வந்தது. கடந்த மாதம் 16ம் தேதி ஒரு பவுன் ரூ.63,120க்கு விற்பனையானது. பின்னர், படிப்படியாக அதிகரித்து ரூ.64,440க்கு விற்பனையானது. பிறகு, தங்கம் விலை ஏற்ற இறக்கத்துடன் இருந்து வந்தது.

இந்நிலையில் இன்று தங்கம் விலை ஒரு பவுன் மீண்டும் ஒரு புதிய உச்சத்தை எட்டியுள்ளது. ஒரு பவுன் ரூ.66,500ஐ நெருங்கியுள்ளது. 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் இன்று கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ஒரு கிராம் ரூ 8,310க்கும், பவுனுக்கு ரூ.160 உயர்ந்து ஒரு பவுன் ரூ.66,480க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 அதிகரித்து ஒரு கிராம் ரூ.114க்கு விற்பனையாகிறது.

## போக்குவரத்து நெரிசல் காரணமாக வள்ளுவர் கோட்டத்தில் போராட்டம் நடத்த தடை

சென்னை, மார்ச் 21



போக்குவரத்து நெரிசல் காரணமாக வள்ளுவர் கோட்டத்தில் போராட்டம் நடத்த காவல் ஆணையர் அருண் தடை விதித்துள்ளார். சென்னையில் அரசியல் கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்த சைதாப்பேட்டை பனகல் மாளிகை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், வள்ளுவர் கோட்டம் உள்ளிட்ட சில இடங்களில் போலீஸார் அனுமதி அளித்து வருகின்றனர்.

அதன்படி, சென்னையின் மையப் பகுதியான நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தில், அடிக்கடி போராட்டம் நடைபெறும். இதனால் அந்தப் பகுதி மட்டும் அல்லாமல் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அடிக்கடி போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து காவல் ஆணையர் அருண் விசாரணை நடத்தினார். இதில், போராட்டத்தின்போது போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் வாகன ஓட்டிகள் கடும் இன்னல்களுக்கு ஆளானது உறுதி செய்யப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல் பல்வேறு தரப்பிலிருந்தும் இங்கு போராட்டம் நடத்த அனுமதிக்க வேண்டாம் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதனையடுத்து, வள்ளுவர் கோட்டம் அருகே போராட்டம் நடத்த காவல் ஆணையர் தடை விதித்துள்ளார். அதற்கு பதிலாக திருவல்லிக்கேணி சுவாமி சிவானந்தா சாலையில் போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்படும் என அறிவித்துள்ளார். போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்துபவர்கள் உரிய சட்ட வழிகாட்டுதலின்படி போலீஸாரிடம் அதற்கு முன்னரே அனுமதி பெறவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சிவகங்கை மாவட்டத்தில் சாலைப்பணி ஒப்பந்ததாரர்களை பணியை தொடங்கவிடாமல் நிறுத்தி வைத்துள்ளதாக குற்றச்சாட்டு

சிவகங்கை, மார்ச்.21

சிவகங்கை மாவட்டத்தில் சாலைப்பணி ஒப்பந்ததாரர்களை பணியை தொடங்கவிடாமல் நிறுத்தி வைத்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும் இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் பல்வேறு இடங்களில் சாலை வசதி அமைக்க தமிழக அரசு அனுமதி அளித்தும் அரசு அதிகாரிகள் ஒப்பந்ததாரர்களை பணியை தொடங்கவிடாமல் நிறுத்தி வைத்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதல் ஒன்றாக சிஸிமிஞ்றி 20242024 ஆம் ஆண்டிற்கான திட்டமான இராமநாதபுரம் நயினார் கோயில் அண்டக்குடி இளையான்குடி சிவகங்கை மேலூர் வரை சென்றடையும் இரு வழி சாலை 76/092 முதல் 78/4கீ.மீ, நெடுஞ்சாலைத்துறை பயணியர் மாளிகை முதல் மேலூர் சாலை இணைப்பு வரை சாலையின் நீளம் 2.328 கிலோமீட்டர் ஆகும்.நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி பலப்படுத்தும் பணியை நெடுஞ்சாலை துறையினர் தொடங்கவிடாமல் தயக்கம் காட்டுவது ஏன் ?என்ற கேள்வி எழுந்துள்ளது.மேலும் இந்த ஒப்பந்தத்தின் உடன்படிக்கை நாள் 10/02/2025 ஆகும் தேவகோட்டையை சேர்ந்த ஒப்பந்ததாரர் ஷிஷி-நீஷி இதனை எடுத்து உள்ளார். இப்பணியை தடுப்பவர்கள் ஓட்ட பொறியாளர் சந்திரன், உதவி கோட்ட பொறியாளர் சையது இப்ராஹிம், உதவி செயற்பொறியாளர் ரமேஷ் குமார் ஆகியோர் அரசு அனுமதி அளித்தது உத்தரவை மீறி செயல்படுவதாக புலம்புகின்றனர்.

இதுகுறித்துமாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

## கலைஞர் கனவு இல்லம் திட்டம் இலக்கு வைத்து நிறைவேற்றும் செல்லூர் ராஜு கேள்விக்கு அமைச்சர் பதில்!

சென்னை, மார்ச்.21



தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2025 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மார்ச் 14ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. மார்ச் 15ஆம் தேதி வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. பட்ஜெட் மீதான விவாதம் நேற்று முதல் நடைபெற்று வருகிறது.

இரண்டாவது நாளாக பட்ஜெட் மீதான விவாதம் சட்டமன்றத்தில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பல்வேறு துறைகளைச் சேர்ந்த அமைச்சர்கள் பதில் அளித்தனர்.

பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் போது நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 202526 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் புதிய வீடுகள் 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் தொடங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

கலைஞர் கனவு இல்லம் திட்டம் தொடர்பாக பேசிய அதிமுக முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்லூர் ராஜூ, "கலைஞர் கனவு இல்ல திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை விட குறைவான நிதிதான் செலவு செய்யப்பட்டுள்ளது" என்று கூறினார்.

அதற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் ஐ. பெரியசாமி, "வருகின்றன் மே மாதம் 31ஆம் தேதிக்குள் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 1 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்படும். 8 ஆண்டு காலத்தில் 8 லட்சம் வீடுகள் கட்டப்படும். நீங்கள் உங்கள் ஆட்சிக் காலத்தில் பசுமை வீடு திட்டத்தை அறிவித்தீர்கள். ஆனால் அந்த திட்டத்தை முழுமையாக செயல்படுத்தவில்லை" என்று கூறினார்.

அதற்கு பதில் அளித்து பேசிய எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகளில் 3 லட்சம் பசுமை வீடுகள் கட்டபட்டது" என தெரிவித்தார்.

## மீரட் கொடூர கொலை சம்பவம் மகளுக்கு மரண தண்டனை கோரும் பெற்றோர் நடந்தது என்ன?

மீரட், மார்ச் 21



ஒருபுறம் ஏஐ தொழில்நுட்பம், விண்வெளி ஆராய்ச்சி என்று வளர்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்க மறுபுறம் மிகக் கொடூரமான குற்றங்கள் சர்வசாதாரணமாக அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன. அப்படியான நடுங்கவைக்கும் குற்றம் ஒன்று உத்தரப்பிரதேசத்தின் மீரட் நகரில் நடந்துள்ளது. அந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட தங்களின் மகளுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று பெற்றோர் நீதிக் குரல் எழுப்பியுள்ளது கவனம் பெற்றுள்ளது.

'மருமகனுக்கு நீதி..' மீரட் நகரைச் சேர்ந்த பிரமோத் கவிதா தம்பதியின் மகள் முஸ்கான் ரஸ்தோகி. இவர் அதே நகரைச் சேர்ந்த சவுரவ் சுக்லாவை திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில், முஸ்கானுக்கு ஷாஹில் சுக்லா என்பவருடன் தொடர்பு ஏற்பட்டது. இவர்கள் இருவரும் சேர்ந்து சவுரவை கொலை செய்துள்ளனர். இந்தக் கொலை அம்பலமான நிலையில் தங்களின் மகள் இந்தச் சமூகத்தில் வாழத் தகுதியற்றவர் என்றும் அவருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்றும் பெற்றோர் மருமகனுக்காக நீதி கோரியுள்ளனர்.

நடந்தது என்ன? சவுரவ் சுக்லா கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் லண்டனில் கப்பல்துறையில் பணி புரிந்துவந்துள்ளார். கடந்த மார்ச் 4ம் தேதி அவர் மீரட் வந்துள்ளார். ஆனால் அதன்பின்னர் அவர் எங்கு சென்றார் எனத் தெரியவில்லை. அவரைக் காணவில்லை எனப் போலீஸில் புகார் தெரிவிக்கப்பட்டது.

மீரட் நகர எஸ்பி ஆயுஷ் விக்ரம் சிங் விசாரணை மேற்கொண்டார். அவருக்கு ஆரம்பம் முதலே சவுரவ் மனைவி முஸ்கான் ரஸ்தோகி மீது சந்தேகம் எழுந்துள்ளது. இதனால், முஸ்கானிடம் தீவிர விசாரணை நடத்தியுள்ளார். அப்போது முஸ்கான் அவரது காதலர் ஷாஹில் சுக்லாவுடன் இணைந்து சவுரவை கொலை செய்ததை ஒப்புக் கொண்டார். கத்தியால் குத்தி கணவரைக் கொலை செய்ததாகவும், பின்னர் உடலை ஷாஹில் உதவியுடன் துண்டு துனாடக வெட்டி ஒரு ட்ரம்மில் போட்டு அதில் சிமெண்ட் கலவையைப் ஊற்றி மூடியதாகவும் கூறினார். இதனையடுத்து போலீஸார் ட்ரம்மில் இருந்த உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பினர்.

'தண்டனையை நேரலை செய்யுங்கள்' இதனையறிந்த முஸ்கானின் பெற்றோர் அவருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று குரல் எழுப்பி வருகின்றனர். முடிந்தால் அவருக்கு வழங்கப்படும் மரண தண்டனையை நேரலை செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார். தங்கள் மருமகன் சவுரவ் சுக்லா மிகவும் நல்ல மனிதர் எனவும் அவருக்கு நேர்ந்த கொடூரம் தங்களை கவலையில் ஆழ்த்தியுள்ளதாகவும் கூறியுள்ளனர். முஸ்கான் ரஸ்தோகி அவரது காதலர் ஷாஹில் சுக்லாவைக் கைது செய்த போலீஸார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணையை தொடர்ந்து வருகின்றனர். நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட இருவரையும் 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க கோர்ட் உத்தரவிட்டது. அங்கிருந்து அவர்களை சிறைக்கு அழைத்துச் செல்ல முயன்றபோது கோர்ட் வளாகத்தில் வழக்கறிஞர்கள் அவர்களைத் தாக்கினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

## ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் காளை முட்டி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சம் நிதியுதவி

மதுரை : மார்ச் 21




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி , பல்வேறு நேர்வுகளில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டிகளின் போது காளை முட்டி உயிரிழந்த 3 பேர் மற்றும் கழிவுநீர்க் குழியில் மூழ்கி உயிரழந்த ஒருவர் என 4 நபர்களின் குடும்பத்தாருக்கு நிவாரணமாக தலா ரூபாய் 3 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 12 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கி ஆறுதல் கூறினார்.

மதுரை மாவட்டம், அவனியாபுரத்தில் 14.01.2025 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மதுரை வடக்கு வட்டம். விளாங்குடியைச் சேர்ந்த திரு.நவீன்குமார் என்ற மாடுபிடி வீரர் மாடு முட்டியதில் காயமடைந்து உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார்.

வாடிப்பட்டி வட்டம், கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் 12.02.2025 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் மாடுபிடி வீரராக பங்கேற்ற வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த பாண்டி (வயது 23) என்பவர் மாடு முட்டியதில் காயமடைந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 19.02.2025 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் கடந்த 16.03.2025 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் மாடுபிடி வீரராக பங்கேற்ற வாடிப்பட்டி வட்டம், மேலக்கால் கிராமம், உட்கடை கச்சிராயிருப்பு கிராமத்தைச் சேர்ந்த மகேஷ்பாண்டி (வயது 24) என்பவர் மாடு முட்டியதில் பலத்த காயமடைந்து சிகிச்சை அளிக்கப்பட்டதில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வாடிப்பட்டி வட்டம், டி.ஆண்டிப்பட்டி கிராமத்தில் வசித்துவரும் சந்தனகருப்பு, கிருஷ்ணவேணி தம்பதியரின் இரண்டு குழந்தைகள் கேசவன் மற்றும் ரோஷன் ஆகிய இருவரும் கடந்த 15.3.2025 அன்று வீட்டினருகே விளையாடிக் கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக அருகிலிருந்த கழிவுநீர்க் குழியில் விழுந்துள்ளனர். இச்சம்பவத்தில் நீரில் தத்தளித்த ரோஷன் அருகில் இருந்தவர்களால் மீட்கப்பட்ட நிலையில் மற்றொரு குழந்தை கேசவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மேற்குறிப்பிட்ட துயரச் சம்பவங்களில் உயிரிழந்த நபர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளதோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அன்னாரது குடும்பங்களுக்கு நிவாரணமாக தலா ரூபாய் 3 இலட்சம் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி , மேற்குறிப்பிட்ட துயரச் சம்பவங்களில் உயிரிழந்த உயிரழந்தவர்களின் குடும்பத்தாருக்கு நிவாரணமாக தலா ரூபாய் 3 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 12 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கி ஆறுதல் கூறினார்.

# கிழக்கு தாம்பரத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிறந்த நாளை முன்னிட்டு கோவிலில் சிறப்பு பூஜை

தாம்பரம் மார்ச் 21

கிழக்கு தாம்பரத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிறந்த நாளை முன்னிட்டு கோவிலில் சிறப்பு பூஜை செய்யப்பட்டு பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் ஆலோசனை படி தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக செயலாளர் கேட் எம்.தர்மா தலைமையில் கிழக்கு தாம்பரம் இரும்புலியூர் பகுதியில் உள்ள பெருமாள் கோவிலில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

இதில் மாவட்ட துணை செயலாளர் மா.செழியன் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். அதனை தொடர்ந்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதில் வழக்கறிஞர் பிரிவு துணை செயலாளர் சுஜாத்தா நந்தினி, பகுதி துணை செயலாளர் ஐ.கே. தர்மா, மாவட்ட பகுதி பிரிதிநிதி பாலமுருகன், மகளீர் அணி துணை செயலாளர் திலகா, 62வது வட்ட துணை செயலாளர் சாம்ராஜ், 61வது வட்ட செயலாளர் ராசி மகேந்திரன், 63வது வட்ட செயலாளர் குமார், 64வது வட்ட செயலாளர் கன்னியப்பன், 65வது வட்ட அவைத்தலைவர் எஸ்.சங்கர், 61வது வட்ட பொருளாளர் நாகூர் மீரான், 63வது வட்ட துணை செயலாளர்கள் ஏழுமலை, அசோக், ஏ.ஏழுமலை மற்றும் பகுதி, வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் கிழக்கு தாம்பரம் பகுதி தேமுதிக சார்பில் சிறப்புடன் செய்யப்பட்டிருந்தன.

# மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் திறன் வளர் பயிற்சி




மானாமதுரை, மார்ச்.21

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் மூலம் ஒரு நாள் திறன் வளர்ப்பு பயிற்சி மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் தலைமையில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் துறை முன்னிலையில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு நேற்றுமுன்தினம் வழங்கப் பட்டது இதில் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் போக்சோ சட்டம் குறித்தும் குழந்தைகள் உரிமைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குவது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டது நடைபெற்ற பயிற்சியில் மானாமதுரை வட்டத்திற்கு உட்பட்ட வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் அனைவரையும் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ராமச்சந்திரன் வரவேற்றும் சமூகப் பணியாளர் சத்தியமூர்த்தி நன்றியுரை கூறியும் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு உரிமைகள் தொடர்பான சட்டங்கள் தொடர்பான பயிற்சியை ஆனந்தகுமார் செல்வி சினேகா ஆகியோர் பங்கேற்றனர்..

# காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேசிய பயிலரங்கம்

காரைக்குடி மார்ச் 21

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி, புவிஅமைப்பியல் துறையில் பெருநிறுவன, தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் புவிஅமைப்பியல் பட்டதாரி களுக்கான வேலை வாய்ப்புகள் என்ற தலைப்பில் ஒரு நாள் தேசிய பயிலரங்கம் பேராசிரியர் ஏ.எல். மெய்யப்பன் - எம். சரோஜா அறக்கட்டளையின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டது.



புவிஅமைப்பியல் பட்டதாரி களுக்கு பல்வேறு தொழில் வாய்ப்புகள் குறித்து வழிகாட்டுவதை நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்வில், புவிஅமைப்பியல் துறைத் தலைவர் உதயகணேசன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் பெத்தா லெட்சுமி தலைமையுரை ஆற்றினார். மாணவர்கள் இது போன்ற நல்ல வாய்ப்புகளைப் பயன்படுத்தி படிக்கும்போதே தங்களை வேலை வாய்ப்பு களுக்காக தயார் செய்து கொள்ளவேண்டும் எனவும் இதுபோன்ற பல நிகழ்வுகளை தொடர்ந்து நடத்தி வரும் புவியமைப்பியல் துறை ஆசிரியர்களுக்கு வாழ்த்து தெரிவித்தும் பேசினார்.

இந்தபயிலரங்கில்புவிஅமைப் பியல்சார்ந்த செயற்கைக்கோள் தொலை உணர்வு மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளின் வளர்ச்சி பற்றிய நுண்ணறிவுகளைப் பல நிபுணர்கள் பகிர்ந்து கொண்டனர். சென்னை பல்கலைக்கழகத்தின் புவிய மைப்பியல்துறையின் முன்னாள் பேராசிரியர் இராம்மோகன் புவியமைப்பியலுக்கும் மனித குலத்திற்கும் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்துள்ள உறவு குறித்தும் செம்பு காலம் பித்தளை காலம் மற்றும் இரும்பு காலம் குறித்தும் விவரித்து பேசினார். சென்னையில் உள்ள தேசிய கடல்சார் விஞ்ஞானி சிஷிர் குமார் தாஷ் பேசுகையில் கடல்சார் புவியமைப்பியல் மற்றும் தொலை உணர்வு துறைகளில் உருவாகி வரும் தொழில் வாய்ப்புகளைப் பற்றி விவரித்தார்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் தொலை உணர்வுத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் இலட்சுமணன் பேசுகையில் உலகளாவிய வழிச்செலுத்துதல் செயற்கை கோள் அமைப்பின் முக்கியத்துவம் குறித்தும் அது எவ்வாறு இயற்கை வள கண்காணிப்பு பணியில் பயனுள்ள பங்களிப்பை வழங்குகின்றது என்றும் விளக்கினார். பிரதீப் கிஷோர் மற்றும் திருச்சி தேசியக் கல்லூரியின் உதவி பேராசிரியர் கார்த்திக் ஆகியோர் பேசுகையில் மாணவர்கள் தொலை உணர்வு அறிவியல் குறித்த திறமைகளை எவ்வாறு வளர்த்து கொள்ளலாம் எனவும் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களில் பெருகி கிடக்கும் வேலை வாய்ப்புகள் குறித்தும் விளக்கினார்கள். சென்னை மேப்ஐடிகம்பெனியின் தொழில் நுட்ப வல்லுநர் கணேசன் பேசுகையில் தங்களது நிறுவனம் செய்து வரும் வளர்ச்சி பணிகள் குறித்தும் அவைகளில் புவிஅமைப்பியல் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு குறித்தும் விளக்கினார். இப்பயிலரங்கில் புவி அமைப்பியல் துறையின் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் பங்கேற்றனர்.

புவிஅமைப்பியல் துறைப்பேராசிரியர் இராஜ் மோகன் நன்றியுரையாற்றினார்.

# கூடுவாஞ்சேரில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



கூடுவாஞ்சேரி மார்ச் 21

கூடுவாஞ்சேரில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி நகர திமுக சார்பில் தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலின் பிறந்த நாளை விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாநகராட்சிக்கு உட்பட்ட நந்திவரம் கூடுவாஞ்சேரி அம்மன் கோவில் திடலில் நடைபெற்றது இதில் நகரச் செயலாளரும் நகரமன்ற தலைவருமான எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி தலைமை தாங்கினார் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜிஜேந்திரன் ராமு, மாவட்ட ஆதிதிராவிடர் நல துணை அமைப்பாளர் கே.பி.ஜார்ஜ், நகர நிர்வாகிகள் அப்துல் காதர், ஸ்ரீமதிராஜி, ஹரி, ரவி, டில்லி, குமரவேல், சதீஷ்குமார், சந்தோஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர் நகர மன்ற துணைத் தலைவர் வழக்கறிஞர் ஜி.கே.லோகநாதன் அனைவரையும் வரவேற்றார்

சிறப்பு அழைப்பாளராக சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் சிறு குரு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதி பொறுப் பாளர் பிரபு கஜேந்திரன், முன்னாள் எம்எல்ஏ மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு ஏழைகளுக்குதையல் இயந்திரம் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவி களை வழங்கிய சிறப்புரை யாற்றினார் இந்த நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் வார்டு கழகச் செயலாளர்கள், வார்டு கவுன்சிலர்கள், நகர இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, வாக்கு சாவடி பாக நிலை முகவர்கள் உட்பட 1000திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் முடிவில் நகரத் துணைச் செயலாளர் ராமமூர்த்தி நன்றி கூறினார்..

# அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள், செவிலியர்களை நியமிக்க கோரி போராட்டம்

சென்னை, மார்ச் 21

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக் கைக்கு ஏற்ப மருத்துவர்கள், செவிலியர்களை நியமிக்கக் கோரி அரசு மருத்துவர்கள் சென்னையில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக் கைக்கு ஏற்ப மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழு சார்பில் தர்ணா போராட்டம் கீழ்ப்பாக்கத்தில் உள்ள மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகத்தில் நேற்று நடைபெற்றது.




சட்டப்போராட்டக் குழுவின் தலைவர் மருத்துவர் பெருமாள் பிள்ளை தலைமையில் நடந்த போராட்டத்தில் கரோனா பேரிடரில் பணியாற்றி உயிரிழந்த அரசு மருத்துவர் விவேகானந்தன் மனைவி திவ்யா மற்றும் குழந்தைகள் உட்பட ஏராளமான அரசு மருத்துவர்கள் பங்கேற்றனர்.

அப்போது அரசு மருத்துவர்கள் கூறியதாவது: உயிரை காப்பாற்றும் மருத்துவர்கள் மகிழ்ச்சியாக பணி செய்திடவும், மருத்துவர் லட்சுமி நரசிம்மனின் உயிர் தியாகத்துக்கு மதிப்பளித்தும் அரசாணை 354ஐ அமல்படுத்தி, அதன்படி அரசு மருத்துவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். கரோனா பேரிடரில் பணியாற்றி உயிரிழந்த அரசு மருத்துவர் விவேகானந்தன் மனைவி திவ்யாவுக்கு அரசு வேலை உடனடியாக தரப்பட வேண்டும். அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

இளைய மருத்துவர்கள், முதுகலை மருத்துவ மாணவர் கள் உள்பட மருத்துவர்களின் பணிச்சுமையை குறைக்க வேண்டும். அரசு மருத்துவர் களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கோரிக்கைகளை, இந்த சட்டப்பேரவை கூட்டத் தொடரிலேயே முதல்வர் நிறைவேற்றுவார் என நம்புகிறோம். இல்லை யென்றால், அடுத்த கட்டமாக, ஜூன் 11ம் தேதி மேட்டூரில் இருந்து சென்னையை நோக்கி பாதயாத்திரை மேற் கொள்வோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முதல்வர் 'அப்பா'வுக்கு கோரிக்கை: கரோனா பேரிடரில் பணியாற்றி உயிரிழந்த அரசு மருத்துவர் விவேகானந்தன் மகள் கீர்த்தனா கூறியதாவது: கரோனா காலத்தில் 2 மாதம் விடுமுறை எடுத்திருந்தால், எங்கள் அப்பா உயிரோடு இருந்திருப்பார். தமிழக மாணவ, மாணவிகள் வாய் நிறைய 'அப்பா... அப்பா' என அழைக்கும்போது அளவில்லா மகிழ்ச்சி அடைவதாக நம் முதல்வர் தெரிவிக்கிறார்.

எங்களுக்கு நிஜமாகவே அப்பா இல்லை. மக்கள் உயிரை காப்பாற்ற, நாங்கள் எங்க அப்பா உயிரை பறிகொடுத்து நிற்கிறோம். அம்மாவும், நாங்களும் ரொம்ப கஷ்டப்படுகிறோம். முதல்வர் அப்பா நிச்சயம், எங்க அம்மாவுக்கு அரசு வேலைக்கான ஆணையை தருவார் என நம்புகிறோம் என்று கூறினார்.




சென்னையில் இருந்து மதுரை நோக்கி வந்த முத்து நகர் விரைவு ரயிலில் திண்டுக்கல் இருப்புப் பாதை காவல்துறையினர் காவல் ஆய்வாளர் தூயமணி வெள்ளைச்சாமி தலைமையில் கஞ்சா சோதனையில் ஈடுபட்டிருந்தபோது அதே வண்டியில் மதுரையைச் சேர்ந்த அண்ணாதுரை (56) என்பவரின் பையை சோதனை செய்துள்ளனர் அப்போது பாண்டிச்சேரியில் இருந்து 44 மது பாட்டில்கள் இருப்பது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து இருப்புப் பாதை காவல்துறையினர் அண்ணாதுரையை கைது செய்து மதுவிலக்கு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

# பழனி அருகே காயிதே மில்லத் சிறுபான்மையினர் அறக்கட்டளை சார்பில் நானூறுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கல்

பழனி மார்ச்.21

பழனி அருகே சமூக நல்லிணக்க இஃப்தார் மற்றும் ரமலான் அன்பளிப்பாக காயிதே மில்லத் சிறுபான்மையினர் சமூக சேவை அறக்கட்டளை சார்பில் நானூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கபட்ட நிகழ்வு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பழனி அருகே சமூக நல்லிணக்க இஃப்தார் மற்றும் ரமலான் அன்பளிப்பாக காயிதே மில்லத் சிறுபான்மையினர் சமூக சேவை அறக்கட்டளை சார்பில் நானூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கபட்ட நிகழ்வு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே ஆயக்குடியில் ஆயை காயிதே மில்லத் சிறுபான்மை சமூக சேவை அறக்கட்டளை சார்பில் ஆயக்குடி பேரூராட்சியில் பணியாற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் மற்றும் ஆயக்குடி அனைத்து சமூக மக்களுக்கும் சமூக நல்லிணக்க இப்தார் மற்றும் ரமலான் அன்பளிப்பாக வேஷ்டி, மற்றும் சேலைகள் பணியாளர்களுக்கு பேரூராட்சி அலுவலகத்தில் வழிபாடு நடத்தப்பட்டு புதிய உடைகள் மற்றும் இனிப்புகளை அறக்கட்டளை நிறுவன தலைவர் டாக்கர்.அஜ்மத் அலி வழங்கினார்.

முன்னதாக இப்தார் நோன்பு வழங்கப்பட்டு அப்பகுதி 300க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு உடைகள் மற்றும் உணவுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் செயலாளர் மன்சூர்உசைன், ரசித்தா, முகமது முஸ்தபா, அப்துல்லா, ஹபிப்ரகுமான், தாஜுதீன், கஜினி முகமது, சபீக்அகமது, ஜமத் அலி என்ற சின்னவர், சாதிக் பாஷா, கவிஞர் வைரபாரதி, ஜெகநாதன், அகமது நிஜாம், லெப்பை சையது, மற்றும் பேரூராட்சி அதிகாரிகளான தலைமை எழுத்தர் சுசீலா, துப்புரவு ஆய்வாளர் சரவணப் பாண்டியன், துப்புரவு மேற்பார்வையாளர் செங்குட்டுவன், கிளர்க் ஜெகதீஸ்வரன், வரித்தண்டலர் ராஜா மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆயை காயிதே மில்லத் சிறுபான்மையினர் சமூக சேவை அறக்கட்டளை சார்பில் 400க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு வேஷ்டி சேலை வழங்கப்பட்ட நிகழ்வு நெகழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.




திருப்பூர் மாநகரம் கொங்கு நகர் சாலை பகுதியில் திராவிட முன்னேற்ற கழகம் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின்72 வது பிறந்தநாள் விழாவில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் கொங்கு நகர் பகுதியில் நடைபெற்றது.இக் கூட்டத்தில் 18,19,20 ஆகிய வார்டு வட்டங்களில் உள்ள வட்டக் கழக செயலாளர்கள் 18 வது வட்டம் தாமோதரன், 19வது வட்டம் கேபிள் மோகன், 20 வது வட்டம் நாசர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.இதில் சிறப்பு தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி செந்தூர் பாண்டி சிறப்புரையாற்றினார்.இந் நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர் திருப்பூர் நவீன், வடக்கு மாநகர பொறுப்பாளர் இ.தங்கராஜ் மற்றும் மாநகரப் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள்,கழகத் தொண்டர்களும்,ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.




தேனி, பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் உள்ள திரவியம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவிகள் சார்பில் நேற்று முன்தினம் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடைபெற்றது. இந்நிலையில் தெ.கள்ளிப்பட்டி பகுதியில் கல்லூரி மாணவிகள் சமூக சேவை மற்றும் சுற்றுப்புற தூய்மையில் ஈடுபட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

## தமிழக வெற்றிக் கழகம் பம்மல் தெற்கு பகுதி தலைமை சார்பில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



பல்லாவரம் மார்ச் 21

செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் பம்மல் தெற்கு பகுதி தலைமை சார்பில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி பம்மல் தெற்கு பகுதி தலைமை டி.எஸ்.குமார் தலைமை ஏற்பாட்டில் நடைபெற்றது,

இதில் 300க்கும் மேற்பட்ட இஸ்லாமிய நண்பர்கள் மற்றும் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டு இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறப்பித்தனர் நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் வி.குமார் பங்கேற்று சிறப்பித்தார்,

உடன் நிகழ்ச்சியில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தமிழக வெற்றி கழகத்தின் மாவட்ட பகுதி வார்டு அணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் உடன் பம்மல் தெற்கு பகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு வி.ஜாவித், பம்மல் தெற்கு பகுதி 10வது வட்ட நிர்வாகிகள் , ராகுல், தேவா குமார், ராஜேஷ், வினோத் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..



திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு உட்கோட்டத்திற்கு உட்பட்ட மாநில நெடுஞ்சாலையான திருப்பூர்காங்கேயம் (சி.டி.சி.டிப்போ முதல் படியூர் வரை) போக்குவரத்து சீராக செல்லும் வகையில் காரனொடிகள் போடப்பட்டு சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. இதனால் போக்குவரத்து இருக்கும் பொதுமக்கள் சாலையில் எந்த இடையூறின்றி வானங்கள் சென்றுவர ஏதுவாக இருக்கும் என உதவிக் கோட்ட பொறியாளர் விஜயகுமார், இளநிலைப் பொறியாளர் ராஜேஷ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்..

## மடப்புரத்தில் வாய் தகராறு ஏற்பட்டதில் பக்கத்து வீட்டுக்காரர் கொலை! 2 பேர் கைது

திருப்புவனம் மார்ச் 21

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மடப்புரம் கிராமத்தில் சந்தானம் என்பவர் வசித்து வருகிறார் அவரது பக்கத்து வீட்டில் வசிக்கும் தூரத்து உறவினரான தினேஷ் என்பவருடன் நேற்று முன்தினம் வாய்த்தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த தினேஷ் மற்றும் அவரது நண்பர் அஜித்குமார் இருவரும் சந்தனத்தை அவரது வீட்டின் அருகே தாக்கியுள்ளனர்

இதில் காயம் அடைந்த சந்தானம் திருப்புவனம்



மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.



சந்தானம் மற்றும் தினேஷ் இடையே முன்விரோதமோ, வழக்குகளோ இல்லை என்று கூறப்படுகிறது. இவ்வழக்கில் தொடர்புடைய தினேஷ் மற்றும் அஜித்குமார் ஆகியோர் கைது நேற்று செய்யப்பட்டுள்ளனர்.




திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய கலந்துரையாடல் கூட்டம் தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆனையத்தின் தலைவர் சொ.ஜோ அருண் சேச தலைமையில் நடைபெற்றது.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகர மேயர் ந.தினேஷ்குமார், மாநகர காவல் ஆனையார் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரீஸ் அசோக், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர்கள் ஹேமில்டன் வில்சன், எ.ஸ்வர்ணராஜ், பிரவீன் குமார் டாட்டியா, ராஜேந்திரபிரசாத், ரமீட் கபூர், ஜே.முகமதுரஃபீ, எஸ்.வசந்த் சிறுபான்மையினர் நலத்துனை இயக்குநர் சர்மிளி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரியில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்

காரைக்குடி மார்ச் 21

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள விசாலையன்கோட்டையில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் வேளாண் பட்டதாரிகளுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் வழிகாட்டுதலின்படி நேற்று நடைபெற்றது.

இம்முகாமில் 10 க்கும் மேற்பட்ட வேளாண் இடுபொருள் தொழில் நிறுவனங்கள் பங்கேற்று மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கினார்.

இவ் வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு வேளாண் கல்லூரிகளில் இருந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.




இம் முகாமின் துவக்க விழாவில் கல்லூரியின் முதல்வர் பொறுப்பு முனைவர் மா. விஷ்ணுப்பிரியா வரவேற்புரை ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து சேது வள்ளியம்மாள் அறக் கட்டளையின் அறங்காவலர் விவேகானந்தன், பாஸ்கரா பில்டர்ஸ், சென்னை சோகா இகெதா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் கண்மணி சுப்பிரமணியன் மற்றும் கல்லூரியின் செயலர் கந்தப்பழம் வாழ்த்துரை வழங்கினர். இவ்வேலைவாய்ப்பு முகாம் நேர்காணலில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.இறுதியாக முனைவர் கவியரசு நன்றியுரை நல்கினார். இதற்கான ஏற்பாடுகளை பேராசிரியர்களும் மாணவர்களும் சிறப்பாக செய்தனர்.

## சாலை விபத்தில் பலியான காவலருக்கு உதவிக்கரம் நீட்டிய காவலர்கள்




மானாமதுரை மார்ச் 21

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர் காவல் நிலையத்தில் ஆய்வாளர் எழுத்தராக பணிபுரிந்து வந்த தலைமைக்காவலர் சசிவர்ணம் கடந்த 18.08.2024 அன்று வாகன விபத்து ஏற்பட்டு இறந்தார். அவரது குடும்பத்திற்கு தமிழகம் முழுவதும் அவருடன் பணியில் சேர்ந்து பயிற்சி பெற்ற 2003 காவல் சகோதரர்கள் மற்றும் உதவு கரங்கள் 77வது பங்களிப் பாக டெலிகிராம் செயலி மூலம் ஒன்றிணைந்து சுமார் ரூ.28,24,000/ (ரூபாய் இருபத்தி எட்டு லட்சத்து இருபத்தி நான் காயிரத்திற்கான LIC சேமிப்பு பத்திரங்கள் , சேமிப்பு கணக்கு புத்தகம், காசோலை என அனைத்தும் மானாமதுரை அருகில் இராஜ கம்பீரம் கிராமத் தில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து கொடுக்கப்பட்டது.


இந்த நிகழ்ச்சியில் சிவ கங்கை மாவட்ட 2003 பேட்ச் தலைமைக் காவலர்கள், பாலமுருகன், சுரேஷ் குமார், பாலமோகன், சரவணன், செந்தில், மணிகண்டன், கண் ணன், சக்கர வர்த்தி, விஜய குமார், கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெரியகுளம் மூன்றாந்தல் அருகே எடையளவுகள் முத்திரை முகாம்

பெரியகுளம் மார்ச் 21

தேனி மாவட்டம் பெரியகுளம் மூன்றாந்தல் அருகே விமலா மருத்துவமனை கட்டிடத்தில் எடையளவுகள் முத்திரை முகாம் நடைபெற்றது.2025ஏ, பி ஆகிய இரு காலாண்டுகளுக்கான இந்த முத்திரை முகாமிற்கு தேனி முத்திரை ஆய்வாளர் கோ.விஜயராகவன் முன்னிலை வகித்தார். பெரியகுளம் நகர் வியாபாரிகள் சங்க தலைவர் மணிவண்ணன், பொருளாளர் விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம்முகாம் குறித்து முத்திரை ஆய்வாளர், விஜயராகவன் கூறும்போது 19032025 முதல் 12042025 வரை (ஞாயிறு, அரசு விடுமுறை நீங்கலாக) நடைபெற்றுவரும் இந்த முகாமில், பெரியகுளம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த வணிகர்கள், தங்களிடம்



உள்ள மின்னணு தராசு, மேடைத்தராசு, இரும்பு எடை கற்கள், மேசை, விட்டத்தராசு, ஊற்றலளவை முதலான எடையளவுகளை, அவற்றிற்கான முந்தைய பரிசீலனை சான்று, முத்திரை தகடு, ஆதார் அட்டை மற்றும் பான் அட்டை, ஆன்லைன் மூலம் முத்திரைக்கட்டணத் தொகை செலுத்தும் வகையில் ஆஜராகி, உரிய கட்டணத் தொகை செலுத்தி, தங்கள் எடையளவுகளை சரிபார்த்து முத்திரையிட்டு, மறுபரிசீலனைச் சான்று பெற்றுக்கொள்ளலாம். தங்களது மின்னணு தராசுகள் முதலானவற்றின் எடையளக்கும் திறனில் அச்சம் இருந்தால் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பழுதுபார்ப்பவர்களை அணுகி, தராசுகளை பழுதுநீக்கி, சரியான அளவீட்டில், ஆய்வாளர் முன் ஆஜர்படுத்தலாம். 2009ம் ஆண்டு சட்டமுறை எடையளவுச் சட்ட விதிகளின்படி, ஓராண்டு/ ஈராண்டுகளுக்கு ஒருமுறை எடையளவுகளை சரிபார்த்து முத்திரையிட்டுக்கொள்ள வேண்டிய நடைமுறை கட்டாயம் என்பதால், வணிகர்கள், வியாபாரிகள் தவறாது பயன்படுத்திக்கொள்ளவும், கூடுதல் விபரங்களுக்கு முத்திரை ஆய்வரின் 73738 17843 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு கேட்டுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். மேலும், முகாமில் வணிகர்களுக்கு முத்திரையிட்டதற்கான மறுபரிசீலனைச் சான்றுகள் வழங்கப்பட்டன.இந்த முகாமிற் கான உரிய ஏற்பாடுகளை பெரியகுளம் நகர் வியாபாரிகள் சங்கத்தினர் செய்தனர்.

# திண்டுக்கல்லில் முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர் கூட்டம்! மாவட்ட ஆட்சியர் தகவல்

திண்டுக்கல், மார்ச்.21

திண்டுக்கல் மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டத்தினைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கருத்தரங்கு கூடத்தில் 26.03.2025 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வருகை தரும் முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர்களைச் சார்ந்தோர்கள் தங்களது கோரிக்கை மனுவின் இரட்டைப் பிரதிகளுடன் 26.03.2025 அன்று முற்பகல் 09.00 மணிமுதல் 10.00 மணிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள கருத்தரங்கு கூடத்தில் ஆஜராகி பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தெரிவித்துள்ளார்



மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகிறது. இதில் இரண்டும் ஒன்றிணைந்த சார்பு நீதிமன்றம் அமைக்க கோரி வழக்கறிஞர் சங்கம் சார்பாக முதல் நாள் நீதிமன்றம் முன்பு ஆர்ப்பாட்டமும் இரண்டாம் நாள் வாடிப்பட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகம் முன்பு உண்ணாவிரத போராட்டமும் செய்தனர் நேற்று மூன்றாம் நாள் நீதிமன்றம் முன்பாக மனித சங்கிலி போராட்டம் நடத்தினர்.



கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நேறறு மாலை நடைபெற்றது. தமிழக வெற்றிக் கழகம் கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் தலைமையில், அரவக்குறிச்சி தொகுதி பொறுப்பாளர் சதீஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் 150க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியத்தில் திமுக வாக்குசாவடி முகவர் கூட்டம்

ஒட்டன்சத்திரம், மார்ச்.21

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்டசத்திரப்பட்டி, தா.புதுக்கோட்டை, வேலூர் அனுப்பட்டி, சிந்தலவாடம்பட்டி, வீரலப்பட்டி, விருப்பாட்சி ஆகிய ஊராட்சி வாக்கு சாவடி முகவர்கள் மற்றும் வாக்குச் சாவடி ( பொறுப்பாளர்கள்) ஆலோசனைக் கூட்டம் சத்திரப் பட்டி ஊராட்சியில் மாவட்ட துணைச் செயலாளர் சி.இராஜா மணி தலைமையில் நடைபெற் றது .மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் தி.தர்மராஜன் முன்னிலையில் வகித்தார்




மேலும் இக்கூட்டத்தில் பொறுப்பாளர்கள் முன்னாள் தொப்பம்பட்டி பி. சி. தங்கம்,தண்டபாணி மாரிமுத்து ஆகியோர் கலந்துகொண்டு திமுக கழக தகவல் தொழில் நுட்ப அணியின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள வாட்சப் சேனலை தங்கள் ஊராட்சிக்கு உட்பட்ட பாக முகவர்களுக்கு வாட்சப் சேனல் லிங்க்கினை பகிர்ந்து, அவர்கள் ஒவ்வொருவரும் அவரவருக்கு உட்பட்ட வாக்குச்சாவடியில் உள்ள ஙிலிசி களையும் ஙிலிசி வழியாக தலா 10 பேர் வீதம் சேனலை திளிலிலிளிகீ செய்யச் சொல்லி அதன் நோக்கத்தை பற்றி எடுத்துரைத்தனர்

இந்நிகழ்வில்: ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# வத்தலகுண்டுவில் இந்தியா கூட்டணி சார்பாக முன்மொழி கொள்கை எதிராக ஆர்ப்பாட்டம்

வத்தலகுண்டு மார்ச்.21

வத்தலகுண்டு ஒன்றிய இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பாக ஒன்றிய அரசின் மும்மொழி கொள்கைக்கு எதிராகவும், தொடர்ச்சியாக தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து வத்தக்குண்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது




கண்டண ஆர்பாட்டத்தில் தி.மு.க. ஒன்றிய செயலாளர் கே.பி. முருகன் , தி.மு.க நகர செயலாளர் ரி.சின்னதுரை தலைமை ஏற்க, முன்னிலை விடுதலை சிறத்தை மாநில துணை செயலாளர் உலகநம்பி, காங்கிரஸ் மாவட்ட பொறுப்பாளர் கணவாபீர் .வருகை தந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை : மதிமுக வடக்கு ஒன்றிய செயலாளர் _மருதுஆறுமுகம், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் ரிஜால் மற்றும் பேரூராட்சி தலைவர் சிதம்பரம், உ.தலைவர் தர்மலிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட குழு பாண்டி , காசிமாயன், மதிமுக மருத்துவரணி வி.சி.க . ராஜ் வளவன், நீலமேகம் மக்கள் நீதிமையம் லட்சுமிநாரயணன், மனோதீபன், ம.ம.க. அலாவுதின் மற்றும் இந்திய கூட்டணி கட்சியினர் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டு கண்டன முழக்கமும், மும்மொழிக்கு எதிராக கையெழுத்தும் இட்டனர் மதிமுக நிர்வாகிகள் மாவட்ட மருத்துவரணி செயலாளர் .சதிஸ் , மாவட்ட இலக்கிய அணி மூர்த்தி, மாவட்ட மகளிரணி து. செயலாளர் பிரிஜிட் ஆரோக்கிய மேரி, திருப்பதி , ராஜபாண்டி, பிரபாகரன், மதிமுக அர்ஜீன், கனேஷ்பாபு, முருகேசன், திவாகரன், அப்துல்அஜிஸ், பரமேஸ்வரன், மகளிரணி தனம், கலா, ஆரோக்கியராஜ், புன்னியராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் ம.ம.க நிர்வாகி நன்றி கூறினார்



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், நயினார்கோயில் ஊராட்சியில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் எனும் சிறப்பு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டார்.



"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தில் எட்டயபுரம் வட்டம், தூ.நா.தி.அ.க. துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் மாணவ மாணவிபர்களுக்கு காலை உணவு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.




தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய துணைத்தலைவர் இமயம் வெ. அண்ணாமலை தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் ஆய்வுக்கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. உடன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, மாநகர காவல் ஆணையர் பிரவீன்குமார் அபினபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய உறுப்பினர்கள் ஜெ. ரேகா பிரியதர்ஷினி, செ. செல்வக்குமார், மு. பொன்தோஸ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்

# கன்னியாகுமரி மாவட்ட நாஞ்சில் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

கன்னியாகுமரி, மார்ச்.21

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில் நடைபெற்றது.



கடந்த பிப்ரவரி 2025 மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்பட்ட 197 மனுக்களுக்கான பதில்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) அணைகளில் நீர்நிலை மற்றும் மழை விபரங்கள் குறித்து தெரிவித்தார்கள். மண் புழுவால் செறிவூட்டப்பட்ட நீரினை தயாரிக்கும் முறைகள் குறித்த காணொளி காட்சி ஒளிபரப்பப்பட்டது. தோட்டக்கலை-மலைப்பயிர்கள் துறை மூலம் மரக்கன்றுகள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் விதைகள் விவாசயிகளுக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது.

விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் நீர்வளத்துறை மூலம் சானல்களில் தண்ணீர் வரத்து மற்றும் குளங்களை தூர்வாருதல், நீர்நிலைகளை பராமரித்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற கேள்விகளுக்கு பதில்கள் தெரிவிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கால்வாய் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு ஜுன் 1ம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என நீர்வளத்துறை செயற்பொறியாளர் தெரிவித்தார்கள்.

தென்னை கருத்தரங்கு தோட்டக்கலைத்துறை மூலம் ஏப்ரல் மாதம் நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தலைவர் அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் புகார்கள் குறித்து மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் கண்காணிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, இ.ஆ.ப., வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஜென்கின் பிரபாகர், நீர்வளத்துறை செயற் பொறியாளர் அருள் சன்பிரைட், தோட்டக்கலை துணை இயக்குநர் ஷீலாஜாண், கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர்.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவகாமி, அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் மாவட்டத்தின் முன்னோடி விவசாயிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# தேனி மாவட்டம் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் உத்தமபாளையம் வட்டத்தில் 2வது நாளாக பல்வேறு இடங்களில் ஆய்வு






தேனி, மார்ச்.21

தேனி மாவட்டம், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் உத்தமபாளையம் வட்டத்தில் இரண்டாவது நாளாக நகராட்சி அலுவலகம், அரசு மருத்துவமனை, நுண் உரம் செயலாக்க மையம், காலை உணவுத்திட்டம் மற்றும் இதரப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், ஆய்வு மேற்கொண்டார்கள்.

கம்பம் நகராட்சி அலுவலகத்தில் தூய்மைப்பணியாளர்களின் வருகைப்பதிவேடு மற்றும் பணி ஒதுக்கீடு செய்யும் முறைகள் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கம்பம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை, உள்நோயாளிகள் பிரிவில் உள்ள படுக்கை வசதி, புறநோயாளிகள் பிரிவு, பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு, மகப்பேறு பிரிவு, சிகிச்சை அளிக்கப்படும் விதம், மருந்து, மாத்திரைகளின் இருப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

கம்பம், கூடலூர், சின்னமனூர் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட பள்ளிகளுக்கு காலை உணவுத்திட்டம் தயார் செய்யப் படும் கம்பம் நகராட்சிப் பகுதியில் உள்ள சமையல் கூடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நுண் உரம் செயலாக்க மையத்தில் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தனித்தனியாக தரம் பிரித்து, அதனை திடக்கழிவு மேலாண்மை மூலம் உரங்கள் தயார் செய்யப்படுதையும், மக்காத குப்பைகளை மறுசுழற்சி செய்யும் பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

க.புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, க.புதுப்பட்டி மற்றும் அனுமந்தன்பட்டியில் உள்ள அரசு கள்ளர் துவக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் காலை உணவுத்திட்டம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, நேற்று மாலை சின்னமனூர் நகராட்சி அலுவலத்தில் உள்ள ஆதார் மையத்தின் செயல்பாடுகள் குறித்தும், சின்னமனூர் உழவர் சந்தை மற்றும் வார சந்தையில் காய்கறிகள் இருப்பு, வரத்து ஆகியன குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

உத்தமபாளையம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள முதன்மை பதப்படுத்தும் நிலையத்தில் வாழைப்பழங்கள் பதப்படுத்தும் முறை குறித்தும் மற்றும் மின்னணு தேசிய வேளாண்மை சந்தை செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வில் சின்னமனூர் நகர்மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு, இணை இயக்குநர் (வேளாண்மைத் துறை) சாந்தாமணி, திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) சந்திரா, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) கிறிஸ்டோபர் தாஸ், சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் கோபிநாத், வட்டாட்சியர் கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161